செ.வெ.எண் : 729 நாள்: 10.11.2020

தஞ்சாவூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் **2009–ன்** படி, **2020–2021** ஆம் கல்வியாண்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைதளுக்கு குறைந்தபட்சம் **25%** இட ஒதுக்கீட்டின்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள **262** பள்ளிகளில் **3833** இடங்கள் எல்.கே.ஜி வகுப்பில் நிர்ணயிக்கப்பட்டு முதல் கட்ட மாணவர் சேர்க்கையில் **2323** இடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து **12.10.2020** முதல் **07.11.2020** வரை மீதமுள்ள **1510** இடங்களுக்கு பெற்றோர்களிடமிருந்து இணைய தளம் மூலமாக **1055** விண்ணபப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

இவற்றில் காலியாக உள்ள இடஒதுக்கீட்டு இடங்களுக்கு மேல் **69** பள்ளிகளில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இந்த பள்ளிகளுக்கு விண்ணப்பித்த பெற்றோர்கள் **12.10.2020** அன்று நடைபெற உள்ள குலுக்களில் கலந்து கொள்ள வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர்கள் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக பின்பற்றி குலுக்கல் மூலம் மாணவர்களை தெரிவு செய்து சேர்க்கை வழங்கிடவும், **மாவட்ட ஆட்சித்தலைவர்** திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. **அவர்கள்** தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.